# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2022

FWC

ஐரோப்பிய வரலாறு - I
**Europe History - I**

**Three Hours ten min**

**Gr -13 (2022)**

25B | T | I

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்குக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

❖ *1 – 10* **வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 1. கொரிந் 2. ஒலிம்பியா 3. சிதோரா
4. லக்கோனியா 5. காத்ரேஜ் ( )

2) 1. தேலிஸ் 2. அனெக்சிமினிஸ் 3. எம்பரடொலஸ்
4. ஆக்கிமிடிஸ் 5. ஹெறரக் கிளிட்டஸ் ( )

3) 1. ஸ்பானியா 2. தென்பிரான்ஸ் 3. நோர்வே
4. சிரியா 5. எகிப்து ( )

4) 1. டெஸிடஸ் 2. ரெடோத்தினீஸ் 3. ஜீ வேனஸ்
4. செனக்கா 5. புளுடாக் ( )

5) 1. பாதுவா 2. பக்தாத் 3. கைரோ
4. டமஸ்கஸ் 5. செமிலே ( )

6) 1. சுவிசின்னா 2. ஒமார் கையாம் 3. அல்ஹசன்
4. வர்ஜில் 5. அல்ராஷி ( )

7) 1. அலெக்சாந்தர் 2. திராஜன் 3. ஹட்ரிய்யன்
4. அன்ரொனினஸ் பியூஸ் 5. மார்கஸ் அவுரேலியஸ் ( )

8) 1. ஹோரஸ் 2. ஒவிட் 3. லிவி
4. ரசிற்றஸ் 5. அலரிக் ( )

9) 1. அமெரிகோ வெஸ்புக்சி 2. வாஸ்கோத பல்போவா 3. ஹெர்னாந்தோகோட்டீஸ்
4. பிரான்சிஸ்கோ பிசாரோ 5. பிரான்சிஸ் ட்ரேக் ( )

10) 1. கலோன் 2. மிராடோ 3. லஃபாயெற்
4. அபே சியேஸ் 5. ரோபெஸ்பியர் ( )

❖ *11 – 15* **வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. ஹோமர் - இலியட்
2. பிளேட்டோ - குடியரசு
3. யூருபீடிஸ் - ஒடிசி
4. ஹெரடோரஸ் - வரலாறு
5. சொபோக்கிளீஸ் - இடிப்பஸ்ரெக்ஸ் ( )

12) 1. யூப்பிட்டர் - விண்வெளி தெய்வம்
2. மினர்வா - கைப்பணி தேவதை
3. வீனஸ் - காதல் தேவதை
4. நெப்ரியூன் - கடல் தேவதை
5. மார்ஸ் - விளைச்சல் தேவதை ( )

13) 1. வரலாறு - ஹெரடோட்டஸ்
2. நவீனவானியல் - நிக்கலஸ் கொப்பனிக்கஸ்
3. பொருளியல் - பிரான்சிஸ் பேகன்
4. அச்சுக்கலை - கூட்டன்பேர்க்
5. விஞ்ஞான சோசலிசம் - கார்ல் மார்க்ஸ் ( )

14) 1. சோபோர்ஸா - மிலான்
2. மெடிஸி - புளோரன்ஸ்
3. எஸ்தே - ∴பெராரா
4. வலோயி - நேபிள்ஸ்
5. கொன்சாகா - மந்துவா ( )

15) 1. யேசூற் - ஒரு கத்தோலிக்க சமயப் பிரசாரச்சங்கம்
2. கர்போனாறி - ஒரு இரகசிய இயக்கம்
3. சோல்வரைன் - கங்க வரிகள் பற்றிய ஓர் ஒன்றியம்
4. டாஸ் கப்பிற்றல் - லெனின் எழுதிய ஒரு நூல்
5. ஜீம்கர் - பிரஷ்ய நிலவுடமைப் பிரதானிகள் ( )

- ***16 – 20* வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. மைகல் ஆஞ்சலோ | A. அமெரிக்கப் புரட்சி |
| 2. மார்டின் லூதர் | B. பயன்பாட்டு வாதம் |
| 3. வோல் டயர் | C. மதச் சீர்திருத்தம் |
| 4. ஜோஜ் வாஷிடன் | D. இத்தாலிய மறுமலர்ச்சி |
| 5. ஜெரமி பெந்தம் | E. ஞானோதயம் |

1. DCEAB 2. DCEBA 3. DEACB 4. EACDB 5. ECADB ( )

17) X Y

| | X | Y |
|---|---|---|
| 1. | ஸ்பானியா | A. நியூ ஆம்ஸ்டோம் |
| 2. | போர்த்துக்கல் | B. பேரு |
| 3. | இங்கிலாந்து | C. பிரேசில் |
| 4. | பிரான்ஸ் | D. ரோட் தீவு |
| 5. | ஒல்லாந்து | E. லோரன்ஸ் நதிப் பகுதி |

1. ABCDE 2. BACDE 3. BCDEA 4. CBADE 5. EDBAC ( )

18) X Y

| | X | Y |
|---|---|---|
| 1. | 16ம் லூயி | A. பிரான்ஸிய புரட்சியின் குழந்தை |
| 2. | மிராபோ | B. ஜக்கோபியர் |
| 3. | ரொபெஸ்பியர் | C. பூர்வன் வம்ச அரசன் |
| 4. | தர்மியோர் | D. எதிர்புரட்சி |
| 5. | நெப்போலியன் | E. டெனிஸ் மைதான உறுதியுரை |

1. CEBDA 2. ABCDE 3. EDCBA 4. DCBEA 5. BACDE ( )

19) X Y

| | X | Y |
|---|---|---|
| 1. | மெட்டனிக் | A. லிபரல் சீர்திருத்தத்தை செயற்படுத்தல் |
| 2. | பிஸ்மார்க் | B. தென் இத்தாலியைக் கைப்பற்றுதல் |
| 3. | ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் | C. ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடிசூடுதல் |
| 4. | கரிபால்டி | D. இரத்தமும் இரும்பும் கொள்கை |
| 5. | விக்டர் இம்மானுவேல் | E. லிபரல் கருத்துக்களை கட்டுப்படுத்தல் |

1. ACBDE 2. EDABC 3. EADCB 4. BCDEA 5. EBACD ( )

20) X Y

| | X | Y |
|---|---|---|
| 1. | 1815 | A. வெரோனா மகாநாடு |
| 2. | 1818 | B. லை பேக் மகாநாடு |
| 3. | 1820 | C. டிரபேவ் மகாநாடு |
| 4. | 1821 | D. ஐ லாசபேல் மகாநாடு |
| 5. | 1822 | E. வியன்னா மகாநாடு |

1. EDCBA 2. ABCDE 3. BADCE 4. DCEBA 5. BDEAC ( )

- **21 – 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் பொருந்தாது அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) பிரான்சியப் புரட்சிக்கான பொருளாதாரக் காரணிகள்
1. மக்கள் மீதான அதிகரித்த வரிச்சுமை.
2. அதிகரித்த போர்ச் செலவு.
3. ஸ்டேட் ஜெனரல் பாராளுமன்றம் கூட்டப்பட்டமை.
4. அரச குடும்பப் பராமரிப்புக்கு அதிக பண ஒதுக்கீடு.
5. ஏடன் வர்த்தக ஒப்பந்த விளைவுகள். ( )

22) ஐரோப்பிய இனத்தவர்கள் அமெரிக்காவுக்கு புலம் பெயரக் காரணங்கள்.
1. ஏழாண்டுப் போரினால் ஏற்பட்ட அதிகரித்த செலவு.
2. தேசிய அரசுகளின் தோற்றம்.
3. வணிகவாதக் கருத்துக்களின் வளர்ச்சி.
4. சமயப்புரட்சி காரணமாக இடம் பெற்ற சமய மோதல்கள்.
5. நாடுகாண் பயணங்களுக்கு அரசர்கள் வழங்கிய ஆதரவு ( )

23) முப்பதாண்டுப் போர்
1. கத்தோலிக்க நாடுகளுக்கும் சீர்திருத்தவாதக் கிறிஸ்தவ நாடுகளுக்கும் இடையிலான போராக ஆரம்பித்தல்.
2. போரின் முடிவில் பிரான்ஸ் தோல்வியடைதல்.
3. ஐரோப்பாவின் இடம் பெற்ற இறுதி சமயப்போர்.
4. போர் பிரதானமாக ஜேர்மனியில் இடம் பெற்றது.
5. ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கையின் குறைபாடுகளால் போர் இடம் பெற்றது. ( )

24) பிரெஞ்சுப் புரட்சியின் பிரதான கட்டங்கள்.
1. ஸ்டேட் ஜெனரல் பாராளுமன்றம் கூட்டப்பட்டமை.
2. டெனிஸ்மைதான சத்தியப் பிரமாணம்.
3. பஸ்ரீல் சிறைச்சாலை தகர்க்கப்பட்டமை.
4. குடியரசினை அமைத்தமை.
5. 16ம் லூயியை நாடு கடத்தியமை. ( )

25) தேசிய அரசுகளின் பண்புகள்
1. நிலப்பிரபுக்களின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படல்.
2. அரசுக்கென நிலையான இராணுவப்படை
3. தேசிய சட்டத் தொகுதி
4. அரசுக்கள் பலமற்று இருத்தல்.
5. தேசிய வரி முறை அறிமுகம். ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் …………….. 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் …………….. 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் …………….. 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் |

26) மேல்வருவோருள் இசைப்பாடல்களை இயற்றிய கிரேக்க கவிஞர்கள் யாவர்?

A) ஸ∴போ

B) பைதகரஸ்

C) பின்டார்

D) பெரிக்கீளிஸ் ( )

27) உரோமர் பண்பாடு பற்றிய குறிப்புக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை?

A) உரோமரின் கோயிற்களிற் பார்திநோன் மிகப் பிரசித்தமானது.

B) ∴பீடியாஸ் பிரசித்தமான உரோமச் சிற்பியாவார்.

C) உரோமப் பேரரசர்களால் ஒரு பொழுது போக்கிடமாகக் கொலோஸியம் கட்டப்பட்டது.

D) உரோமரின் கட்டிடங்கள் பயன்பாடு கருதி அமைக்கப்பட்டவை. ( )

28) மேல்வரும் கூற்றுக்களில் எது/ எவை மறுமலர்ச்சி தொடர்பாகச் சரியானது/ சரியானவை?

A) வட இத்தாலியிலுள்ள சுதந்திரமான இராச்சியங்களில் மறுமலர்ச்சி ஆரம்பமாகியது.

B) மறுமலர்ச்சிக் காலத்திலே கிரேக்க, லத்தீன் பண்பாட்டு வடிவங்கள் புத்துயிர் பெற்றன.

C) துருக்கியர் கொன்ஸ்தாந்தி நோபிளைக் கைப்பற்றியமை மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவான ஒரு முக்கியமான காரணமாகும்.

D) கப்பலோட்டி ஹென்றி (Henry the Navigator) மறுமலர்ச்சிக்கு ஆதரவு புரிந்த முதன்மையானோரில் ஒருவராவார். ( )

29) மேல்வருவனவற்றுள் எவை ஒரு தேசிய அரசின் பிரதானமான அம்சமாகும்?

A) ஒரு பலமான நிலைப்படை.

B) ஒரு பலமான மத்திய அரசாங்கம்.

C) ஒரு தகராறு புரியும் மானியப் பிரபுக்கள் வர்க்கம்.

D) அரசியல் அதிகாரப் பரவலாக்கம். ( )

30) மேல்வருவோரிற் பிரான்ஸின் முதலமைச்சர்களாக விளங்கியோர் யாவர்?

A) ஹென்றி ஹட்ஸன்.

B) றிச்செலியூ

C) மஸாறின்

D) வோல்ற்ரேயர் ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) முதலாவது உரோமப் பேரரசனாக கருதப்படுபவர் யார்?

(1) மகா அலெக்சாந்தர்

(2) யூலியஸ் சீசர்

(3) குளோடியஸ்

(4) மார்க்கஸ் ஒரோலியஸ்

(5) ஒகஸ்டஸ் சீசர்

32) 1649 இல் பகிரங்கமாக மரணத்துக்கு உள்ளாக்கப்பட்ட ஆங்கில அரசன் யார்?
(1) முதலாம் ஜேம்ஸ்
(2) இரண்டாம் ஜேம்ஸ்
(3) ஏழாம் ஹென்றி
(4) எட்டாம் ஹென்றி
(5) மகா சாள்ஸ்

33) இத்தாலியை ஐக்கியப்படுத்தும்போது சார்மனியாவை ஆண்ட மன்னன் யார்?
1) பத்தாம் சார்ஸ்
2) லூயிஸ் பிலிப்
3) சார்ள்ஸ் அல்பேர்ட்
4) விக்டர் இமானுவேல் II
5) முதலாம் வில்லியம் ( )

34) மனிதகூர்ப்புக் கொள்கையை முன் வைத்தவர் யார்?
(1) லூயி பாஸ்ரர்
(2) மேரிகியூரி
(3) சார்ள்ஸ் டார்வின்
(4) சிக்மனட் புரோயிட்
(5) அல்பேர்ட் அபின்ஸ்ரீன் ( )

35) கண்டத்திட்டக் கொள்கை முன்வைத்தவர்.
1) நெப்போலியன் பொனப்பாட்
2) பிஸ்மார்க்
3) றொஸ்கி
4) 16ம் லூயி
5) நெக்கர ( )

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | மத்திய காலத்தில் ஐரோப்பாவிலே கிறிஸ்தவ சமயத்தை ஆதராமாகக் கொண்டு ஒரு பொதுவான நாகரிகம் உருவானது. | முற்கால மானிடவாதிகளில் ஒருவரான பெற்றாக்கைச் சிலர் மானிடவாதத்தின் தந்தையெனக் கொள்வார். ( ) |
| 37) | ஐரோப்பாவிற் புரட்சிகளை அடக்குவதற்கு மெற்றேர்னிக் கடைப்பிடித்த கொள்கை 'கண்டன முறை' என்று சொல்லப்படும். | ∴பிரான்ஸிஸ் 1830 இல் ஏற்பட்ட புரட்சிக்கு லூயி கொசுத்தலைமை தாங்கினார். ( ) |
| 38) | 1848 ஆம் ஆண்டிற் புரட்சிகள் ஒரு குறுகிய காலத்திலே பல ஐரோப்பிய நகரங்களிற் பரவின. | பாரிசில் 1848 ஆம் ஆண்டு பெப்ரவரி 22.24 ஆம் திகதிகளில் ஏற்பட்ட புரட்சி பற்றிய செய்திகள் வியென்னா, மிலான், வெனிஸ், பேர்லின் ஆகியவற்றில் 1848ஆம் ஆண்டு மார்ச் 13.18 திகதிகளிற் கிளர்ச்சிகள் ஏற்படுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தன. ( ) |
| 39) | கைத்தொழில் மயமாக்கத்தின் காரணமாக ஐரோப்பாவில் நகரங்கள் எண்ணிக்கையிலும் அளவிலும் சனத்தொகையிலும் வளர்ச்சியடைந்தன. | ஐரோப்பாவிலே 1800 இற்கு 10 விதமானவர்களே நகரங்களில் வாழ்ந்தனர். ஆயினும் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானியாவில் 52 வீதமானோருக்கும் பிரான்சில் 25 வீதமானோருக்கும் நகரங்களில் வாழ்ந்தனர். ( ) |
| 40) | 1774 ஆம் ஆண்டு கண்ட (Continemtol) காங்கிரஸ் மாநாட்டில் நடைபெற்ற தேநீர் விருந்து வொஸ்ற்ரன் தேநீர் விருந்து என்று சொல்லப்படும். | அமெரிக்கப் புரட்சியிலே "சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம்" என்ற கலோகத்தோடு இங்கிலாந்திற்கு எதிராக அமெரிக்கர் போராடினர். ( ) |

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2022

ஐரோப்பிய வரலாறு - II
**Europe History - II**

**Gr -13 (2022)** | 25B | T | II

**அறிவுறுத்தல்கள் :**

- **வினாத்தாளை விளங்கிக்கொள்வதற்காக மேலதிகமாக பத்து நிமிடங்கள் வழங்கப்படும். (மொத்தமாக 3 மணித்திலாயங்களும் பத்து நிமிடமும்)**
- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. கோர்சிகா | 2. பிரனிஸ் | 3. றைன் நதி | 4. கருங்கடல் |
| 5. இலண்டன் | 6. பேர்ளின் | 7. சுவிஸ்ர்சலாந்து | 8. எதேன்ஸ் |
| 9. ரோம் | 10. விஸ்பன் | 11. பிரான்ஸ் | 12. கீல் |

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி B

2) கிரேக்க கலாச்சாரத்தின் பிரதான பண்புகளை பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

3) ஐரோப்பிய வரலாற்றில் மறுமலர்ச்சி பின்வரும் துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்களை தெளிவுற விளக்குக.
   i. கலை கட்டிடக்கலை
   ii. அரசியலும் ஆட்சி முறையும்
   iii. விஞ்ஞானம் (16 புள்ளிகள்)

4) அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த அரசியல் பொருளாதார காரணிகளை குறிப்பிட்டு தெளிவுற விளக்குக. (16 புள்ளிகள்)

5) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்தும் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   i. உரோப் பேரரசில் கிறிஸ்தவத்தின் வெற்றி
   ii. எதிர்மதச் சீர்திருத்தம்
   iii. பதின்னாங்காம் லூயி
   iv. இங்கிலாந்தில் மகோன்த புரட்சி (16 புள்ளிகள்)

## பகுதி C

6) i. கைத்தொழில் புரட்சி முதலில் உருவான நாடு எது? *(1 புள்ளி)*

ii. நெசவுத் தொழிலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப கால பொறிகள் இரண்டு தருக. *(2 புள்ளி)*

iii. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை? *(4 புள்ளி)*

iv. கைத்தொழில் புரட்சி காரணமாக அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக. *(9 புள்ளி)*

7) பிரான்சிய புரட்சிக்கான காரணங்கள் தெளிவுற விளக்கி கட்டுரை எழுதுக. *(16 புள்ளிகள்)*

8) i. நெப்போலியனின் பிரான்ஸில் அதிகாரத்தை கைப்பற்றிய முறையினைப் பரிசீலிக்குக. (7 புள்ளி)

ii. நெப்போலியன் பொனப்பாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளை ஆதாரமாக கொண்டு அவருடைய சாதனைகளை மதிப்பிடுக. *(9 புள்ளி)*

9) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்தும் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

i. ஜோசெப் மசினி

ii. வியான்ன மகாநாட்டின் பணிகள்

iii. 1848 புரட்சி

iv. காடினல் ரிச்சலியு *(16 புள்ளிகள்)*

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

நான்காம் தவணைப் பரீட்சை - 2022

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**4th Term Examination - 2022**

FWC

ஐரோப்பா வரலாறு

